*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 101/2018***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-3)***

*Name / Father's Name:* ***திரு.ஆறுமுகம் த/பெ. ராமசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13.05.2025.**
துவக்க நேரம் 02.24 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் இல்லை என்றாலும் போலீஸ் பொறுப்பதிகாரியான திரு.மோகன்சுந்தரராசு அவர்கள் ஆஜராகியுள்ளார். அவர் முன்னிலையில் சாட்சி அடையாளம் காட்டப்பட்டு விசாரணை**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது தெடாவூர் புதூரில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் வழக்கு தரப்பினர்கள் இருவருக்கும் சண்டை நடந்ததாக கேள்விபட்டேன். இவ்வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரிகள், எனது ஊரைச்சேர்ந்தவர் மற்றும் எனக்கு நன்கு பழக்கமுடையவர்கள் என்றால் சரிதான். கடந்த 04.03.2017 ம் தேதி இரவு சுமார்

08.30 மணியளவில், எதிரிகள் மூவரும், வாதி மாசிலாமணியை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டி, அவரது தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி, அவரது சேலையை பிடித்து இழுத்து, அவரை மாறி மாறி எட்டி உதைத்து அடித்தார்கள் என்றும், அதனை கேட்க வந்த அவரது கணவர் அழகேசனையும் அடித்து காயப்படுத்தி, வாதிக்கும், அவரது கணவருக்கும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்பொழுது ஆஜர் எதிரிகள், எனது ஊர்க்காரர்கள் மற்றும் எனக்கு நன்கு பழக்கமுடையவர்கள் என்பதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 02.35 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.05.13 16:48:55 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 101/2018***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-5 (LW-7)***

*Name / Father's Name:* ***திருமதி.பூங்கொடி க/பெ. கோபால்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13.05.2025.**

துவக்க நேரம் 02.36 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் இல்லை என்றாலும் போலீஸ் பொறுப்பதிகாரியான திரு.மோகன்சுந்தரராசு அவர்கள் ஆஜராகியுள்ளார். அவர் முன்னிலையில் சாட்சி அடையாளம் காட்டப்பட்டு விசாரணை**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆணையம்பட்டி புதூரில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் போலிசார் கேட்டதன் பேரில் நான் ஒரு கையெழுத்து போட்டேன். எந்த இடத்தில் கையெழுத்து செய்தேன் என்று எனக்கு நியாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகஜரிலுள்ள 2 வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரிகள், எனது ஊரைச்சேர்ந்தவர்கள் மற்றும் எனக்கு நன்கு பழக்கமுடையவர்கள் என்றால் சரிதான். கடந்த 05.03.2017 ம் தேதி பகல் 02.300 மணியளவில், தெடாவூர்புதூருக்கு போலிசார் வந்து, சம்பவயிடத்தை பார்த்து படம் வரைந்து, எழுதினார்கள் என்றும், அதில் நான் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்தேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்பொழுது ஆஜர் எதிரிகள், எனது ஊர்க்காரர்கள் மற்றும் எனக்கு நன்கு பழக்கமுடையவர்கள் என்பதால் எந்த இடத்தில் கையெழுத்து செய்தேன் என்று தெரிவில்லை என்பதாக உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

முடிவு நேரம் 02.45 A.N

C UDAYASUNDARAM Digitally signed by C UDAYASUNDARAM Date: 2025.05.13 16:49:07 +0530

Judicial Magistrate No.2, Attur.